# நீலகிரி மாவட்டம் - குந்தெ வட்டார படுகர் வாழ்வியல்

**ந.ஆரி**

முனைவர் பட்ட ஆய்வாளர் (முழுநேரம்)

தமிழ்த் துறை, கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி,

கோயம்புத்தூர் - 641029,

தமிழ்நாடு, இந்தியா.

## முன்னுரை

உலக மக்களின் பண்பாடு என்பது தனித்துவமானது. வாழ்வியல் சார்ந்து, நடந்ததை சார்ந்து, மாறுதலுக்கு உட்படுவது ஆகும். படுகர் இன மக்களின் பண்பாடும் அத்தகையதே. தற்பொழுது பல்வேறு காரணங்களுக்காக உலகின் பல பகுதிகளிலும் படுகர்கள் வாழ்கின்றனர். அவர்கள் தான் வாழும் சூழ்நிலைக்கேற்ப தங்கள் பண்பாட்டின் ஒரு சில கூறுகளை மாற்றிக் கொள்கின்றனர். இவர்களைப் பொறுத்தவரை பண்பாடு, கடந்த காலத்திற்கான இணைப்பாகவும், எதிர்காலத்திற்கான வழிகாட்டியாகவும் கருதப்படுகிறது.

இவர்களின் முன் வரலாறு, மொழி, பண்பாட்டுச் சூழல் நடத்தை ஆகியன பற்றி இக்கட்டுரை அமைகிறது.

## பண்பாட்டுக் கல்வி

இன்றைய தலைமுறையினருக்கு பண்பாட்டுக் கல்வியை அவர்களின் குடும்பம்தான் கற்றுத் தருகிறது. பண்பாட்டைத் தனித்தனியாக உருவாக்கவும் மாற்றவும் இயலாது. ஏனெனில் இது ஒரு குமுகக் கருத்தாகும்.

பண்பாடு, மக்களை வடிவமைக்கும் தன்மை உடையது. பண்பாடு பற்றிய ஆய்வு மனிதர்களின் தன்மையை வெளிப்படுத்துகிறது. இன்றைய இளைஞர்கள், கூட்டு நல்வாழ்வையும் நீதியையும் தேடுகிறார்கள். இளைஞர்களின் அணுகுமுறைக் கேற்ப நமது மனநிலையையும் நடத்தைகளையும் நெறிப்படுத்த வேண்டும்.

## ஆரோக்கியமான சமுதாயம்

உலக சுகாதார நிறுவனம் குறிப்பிடும் ஆரோக்கியத்திற்கு விளக்கம், “உடல் அளவில், உள்ள அளவில், சமுதாய அளவில், பண்பாட்டு அளவில், பொருளாதார அளவில் தகுதி அடையதல்” ஆகும்.

படுகர்களின் வரலாறு, மொழி, பண்பாடு, நடத்தை அடிப்படையில் அறிந்து கொள்வதற்கு ஏற்ப ஒரு சில கூறுகளை அறியலாம்.

## தகுதி அடைதல்

ஒவ்வொருவரும் தத்தமது தகுதியை அடைந்தால் சமுதாயத்தில் ஏற்றத்தாழ்வு இருக்காது. அதற்கான பொறுப்பு அனைவருக்கும் உள்ளது.

காலநிலை மாற்றம், பொருளாதார ஏற்றத்தாழ்வு, அரசியல் கடமை ஆகியவற்றில் தத்தமது சிந்தனையை சீர்படுத்தி உண்மையை வெளிப்படுத்தி ஆரோக்கியமான சமுதாயத்தை உருவாக்க வேண்டும்.

## முன் வரலாற்றை அறிதல்

ஒவ்வொருவரும் தம்முடைய முன் வரலாற்றை அறிந்து கொள்வது இன்றியமையாதது. தமது குடும்பம், ஊர், பண்பாடு குறித்த பார்வை தொடர்ச்சியாக புதிது புதிதாக மறுபரிசீலனை செய்யப்படுவதை அறிய வேண்டும்.

## நீலகிரி குந்தா படுகர்கள்

நீலகிரி மாவட்டம், இந்தியாவின் முதல் உயிர்க்கோள காப்பகமாகும். உலக வரைபடத்தில் கவனத்தை ஈர்த்துள்ள இம்மாவட்டத்தில் நெடுங்காலமாக குந்தா பகுதியில் வாழும் படுகர்களின் வரலாற்று காலத்திற்கு முற்பட்ட பண்பாட்டை ஆராய்ச்சி செய்வதன் மூலம் அவர்களின் தொன்மையை அறிந்து கொள்ள இயலும்.

தற்போதைய நீலகிரி மாவட்டம், பழங்குடியின மக்களின் நிலமாக அறியப்படுகிறது. இங்குள்ள பாறை ஓவியங்களும், குகை ஓவியங்களும், படுகர்களின் தொன்மையைப் பற்றிய ஆய்வுக்கு உறுதுணையாக விளங்குகின்றன.

நீலகிரியில் கிடைக்கும் முன்னோர் வழிபாட்டின் நடுக்கற்களின் நீட்சியாக உள்ள செலக்கல்கள், சிற்பங்களாக இருப்பதால் தனித்துவம் பெறுகிறது. **“மலைகளில் உள்ள படுகர்கள் கல்திட்டைகளை செலக்கல்லு என்று அழைக்கின்றனர்”**[1].

படுகர்கள் தங்கள் மூதாதையர் வாழ்ந்த பகுதிகளை வழிபடும் வழக்கம் உடையவர்கள். இவர்களது புதையிடங்களில் காணப்பட்ட சுடுமண் கலங்கள் வாயிலாக கண்டெடுக்கப்பட்ட கலங்களைப் போலன்றி மாறுபட்டவையாக இருப்பதை அறியலாம். **“கேரளாவில் சுடுமண் சிற்பங்கள் பெருங்கற்கால புதைவிடங்களில் ஒரு இடம் பாலக்காடு”**[2] என்று பவுலோஸ் என்ற ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார். ஆசிரியரால் அண்மையில் சிற்பங்கள் ஆய்வு செய்யப்பட்டு சுடுமண்களை நீலகிரியில் உள்ளதோடு தொடர்புபடுத்தப்பட்டது.

## படுகர் வரலாறு

நீலகிரி மலைப்பாங்கான நாடாக இருந்தாலும், வாசனைப் பொருட்கள், பிற மதிப்புமிக்க இயற்கை பொருட்கள், தாவரங்கள், விலங்குகள் நிறைந்ததாக இருந்தது.

**“சேரர்கள், ஒன்றுக்கு மேற்பட்ட தலைநகரங்களில் இருந்து நீலகிரியை ஆட்சி செய்தனர். சங்ககாலத்திற்கு முன்பிருந்து கி.பி 12ஆம் நூற்றாண்டு வரை சேரர்கள் ஆண்டனர். முதல் சேர வம்சம் கி.பி 5ஆம் நூற்றாண்டு வரை நீடித்தது. சேரன் செங்குட்டுவன் கி.பி இரண்டாம் நூற்றாண்டில் நீலகிரியை ஆண்டான். உதியன் சேரலாதன் மூன்றாம் நூற்றாண்டில் ஆட்சி செய்தான். கி.பி நான்காம் நூற்றாண்டில் சேரர்கள் சுதந்தர ஆட்சியாளராக விளங்கினார்கள்”**[3].

## கங்க வம்சம்

**“நீலகிரி, கங்க வம்சத்தால் 6,7ஆம் நூற்றாண்டுகளில் ஆளப்பட்டது. கங்கர் தளபதி கி.பி 908ல் நீலகிரிக்கு வருகை தந்து நீலகிரியில் வாழ்ந்த படுகர்களைப் பற்றி குறிப்பிட்டுள்ளார்”**[4]. பிற்காலத்தில் சேரர்கள், பாண்டியர்கள் அல்லது சோழர்களின் ஆதிக்கத்தின் கீழ் இருந்துள்ளது.

**“முதலாம் ராஜ ராஜ சோழன், நீலகிரிக்குச் செல்வதற்காக தனது தூதுவருடன் பதினெட்டுக் காடுகளைக் கடந்து நீலகிரியை அடைந்து படுகர்களைக் கண்டதாக வரலாற்றுக் குறிப்புகள் உள்ளன”**[5].

**காள ராஜா**

**“கி.பி 1116இல் காள ராஜா என்ற படுக அரசர் நீலகிரியை ஆட்சி செய்துள்ளார் என கூகல் கல்வெட்டுகளால் அறியலாகிறது”**[6].

**ஹொய் சாளர்கள்**

விஷ்ணு வர்தன் 1111-1141இல் நீலகிரியை வென்றான் என்ற செய்தியால் ஹொய்சாளர் ஆட்சி நீலகிரியில் நடைபெற்றுள்ளது என அறிந்து கொள்ளலாம்.

**விஜயநகர அரசர்கள்**

நீலகிரி 1336 முதல் 1565 வரை விஜயநகரப் பேரரசில் ஒரு பகுதியாக இருந்துள்ளது.

15 மற்றும் 16 ஆம் நூற்றாண்டுகளில் உம்மத்தூர் தலைவர்கள் நீலகிரியை விஜயநகரப் பேரரசின் கீழ் ஆட்சி செய்துள்ளனர்.

**∴பெனிசியோ**

நீலகிரி மலைக்கு முதன் முதலில் 1603ல் ஜெக்கம் பெரெரி என்ற பாதிரியார் வந்து, முதலில் படுகர் கிராமமான மேல்குந்தாவை அடைந்தார். அப்போது படுகர்கள் வீடுகள் கட்டி விவசாயம் செய்து நிலையாக வாழ்ந்து வந்தனர்.

**கிருஷ்ண ராஜா உடையார்**

கி.பி 1610 முதல் 1760 வரை மைசூர் உடையார் மன்னர்களின் கட்டுப்பாட்டின் கீழ் நீலகிரி இருந்துள்ளது.

**ஹைதர் அலி**

1766 முதல் 1770 வரை ஹைதர் அலியின் ஆட்சியின் கீழ் நீலகிரி ஆளப்பட்டது.

**திப்பு சுல்தான்**

1789க்குப் பிறகு ஆங்கிலேயர் 1801ல் நீலகிரி கைப்பற்றப்படும் வரை ஆட்சி செய்தார்.

**ஆங்கிலேயர்**

1819ல் கோவை மாவட்ட ஆட்சியாளராக இருந்த ஜான் சலீவன் கோத்தகிரி வழியாக நீலகிரிக்கு வந்து, 1829ல் உதகைக்கு வந்தார். 1831-32ல் அவலாஞ்சி, சிஸ்பாரா, குந்தா பகுதிகளில் சாலைகள் போடப்பட்டன.

பின்னர் 1869ஆம் ஆண்டு நீலகிரி மாவட்டத்திற்கு தனி ஆட்சியரை நியமிக்கும் அதிகாரத்தை வழங்கினார். 1877ல் வயநாடு பகுதி நீலகிரி மாவட்டத்தில் இணைக்கப்பட்டது. நாடு விடுதலை பெறும் வரை ஆங்கிலேயர்கள் நீலகிரியில் ஆட்சி செலுத்தி வந்துள்ளார்கள்.

## மொழி

படுகர் பேசும் மொழி படுகு மொழியாகும். திராவிட மொழிகள் பரந்த அளவில் பரவி இருப்பதற்கான மொழியியல் சான்றுகள் உள்ளன.

சிறிய மொழிகள் கூட பேச்சு வழக்கில் வகைப்படுத்தப்படுகின்றன. அவற்றுள் படுக மொழியும் ஒன்று. நான்கு முக்கிய மொழிக் குழுக்களுள் தென் திராவிட மொழிக் குடும்பத்தில் படுக மொழி அமைகிறது.

படுக மொழியினுள் உள்ள முக்கிய இலக்கணம் மற்ற நீலகிரி மொழிகளுடன் ஒன்றிணைகிறது. இதில் ஆரம்பகால தெற்கு திராவிட அம்சங்களைக் கண்டறியலாம் என்று பைலட் ராய்ச்சூர் குறிப்பிடுகிறார். அதற்கு முன்னரே பி.கே.மல்லி அவர்கள், படுக சமுதாயம் நீலகிரியிலிருந்து உருவானது என்றும், படுக மொழியின் நாவளை ஒலிகள் தனித்துவமானது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

## படுகர்களின் வாழ்வியல் பண்பாடு

பண்பாடு என்பது விரிந்த பொருளுடையது. உலகில் உள்ள ஒவ்வொரு பண்பாடும் தனித்துவமானது. நீலகிரி படுகர்களின் பண்பாடு அவர்களின் வாழ்வியல் சார்ந்தது. அவர்களின் நடத்தை சார்ந்தது. பிற இனத்தவரை போலவே படுகர்களின் பண்பாடும், நடத்தையும் ஒன்றையொன்று சார்ந்திருப்பதை அறியலாம்.

## படுகர் பண்பாட்டில் மானிடவியல் சிந்தனை

பண்பாட்டின் நுணுக்கங்களை மானிடவியலாளர்கள் பல்வேறு கூறுகளாக விளக்குவர். வாழ்வியல் சூழல், நடத்தை, தினசரி வாழ்க்கையில் பயன்படுத்தும் நுணுக்கங்களையும் பண்பாட்டுக் கூறுகளையும் உற்று நோக்கல் மூலம் வரையறுக்க இயலும்.

## படுகர் பண்பாட்டுச் சூழல்

படுகர்களின் அன்றாட வாழ்வில் என்ன செய்கின்றார்கள் என்பது அவர்கள் வாழ்ந்த பண்பாடு சார்ந்தது. பல்வேறு காரணங்களுக்காக, தாங்கள் வளர்ந்த மலையை விட்டு வெளியூர்கள், வெளிமாநிலங்கள், வெளிநாடுகளில் வாழ்ந்து வருகிறார்கள். தாங்கள் வாழும் சூழலுக்கு ஏற்ப தங்கள் பண்பாட்டின் சில கூறுகளை மாற்றிக் கொள்வார். எதை மாற்றலாம் அல்லது, எதை மாற்ற வேண்டும் என்று அறிந்து கொள்வது கடினம். ஒவ்வொரு படுகரும் தமது செயல்கள் மற்றும் நடத்தை பற்றி முழுமையாக அறிந்திருக்க மாட்டார்கள். இது பண்பாட்டின் அடிப்படையானது என்று அறிகிறோம்.

## படுகர் பண்பாடு மற்றும் நடத்தை வரையறை

**"பண்பாட்டை மதிப்புகள், நம்பிக்கைகள், நடத்தை மற்றும் பொருட்கள் என சமூகவியலாளர்கள் வரையறை செய்கிறார்கள். அவை மக்களின் வாழ்க்கை முறையை உருவாக்குகின்றன"**[7] என்பதனால் மக்களின் வாழ்க்கை முறை உருவாக்கத்தை அறியலாகிறது.

## குடும்பத்தால் கலாச்சார பரிமாற்றம்

புதிய செயல்பாடுகளை பரப்புவதில் குடும்பங்கள் பெரும்பங்கு வகிக்கின்றன. ஒரு குடும்பம் ஒரு பெரிய சமுதாயத்தின் ஒரு சிறிய பதிப்பாகும்.

குடும்பமே இளைய தலைமுறையினருக்கு கல்வி கற்பிக்கிறது. அவர்களுக்கு சீரிய கட்டுப்பாடு, பொறுப்பு மற்றும் தந்தையரின் திறன்கள், தொழிற்பயிற்சி போன்ற சமூக மதிப்புகளைக் கடத்துகிறது.

குழந்தைகள் தங்கள் பெற்றோர்களை பின்பற்ற வேண்டிய அவசியம் இல்லை என்றாலும், குழந்தைகளின் மனப்பான்மை மற்றும் எதிர்காலம் பற்றிய எதிர்பார்ப்புகளை உருவாக்குகின்றார்கள்.

## கல்வி

புதிய முன்னேற்றங்களை பரப்புவதற்கும் பராமரிப்பதற்கும் மிகவும் சக்தி வாய்ந்த வழிமுறைகளில் ஒன்று சமுதாயத்தில் கிடைக்கும் கல்வியாகும்.

**“கல்வி முறை முந்தைய தலைமுறையினரால் சமுதாயத்தின் கூட்டு அறிவை ஒவ்வொரு அடுத்த தலைமுறையினறுக்கும் ஒருங்கமைக்கப்பட்ட பரிமாற்றத்திற்கான வழிமுறையாகும். கல்வி எதிர்கால வாய்ப்புகளையும் சவால்களையும் எதிர்கொள்ள உதவுகிறது. சாதிக்க வேண்டும் என்ற ஆவலை எழுப்புகிறது. அவர்களைத் தயார்படுத்துகிறது”**[8].

## மக்களின் நடத்தை

நடத்தை என்பது ஒரு குறியீட்டு வடிவத்தைக் கொண்ட செயல்கள், உணர்வுகளுடன் தொடர்புடையது.

**“ஒரு சின்னம் என்பது ஒரு பொருளைப் பயன்படுத்துபவர்களால் தீர்மானிக்கப்படுகிறது”**[9] என்பதற்கு ஏற்ப படுகர்களின் விவசாயம் சார்ந்த சடங்குகளை தொடர்ந்து செய்து வருகிறார்கள். இதனால் படுகர் பண்பாட்டுக் குறியீட்டை உருவாக்குகிறார்கள். படுகர் நடத்தை அவர்களது பண்பாட்டின் மைய அம்சமாகும். நடத்தை பண்பாட்டை வரையறுக்கிறது. பண்பாடு நடத்தையை உருவாக்குகிறது. மாறிவரும் சூழலுக்கு ஏற்றவாறு படுகர்களின் பண்பாடும் மாறுகிறது. மனிதர்களின் கற்றல் திறனுக்கேற்பவும் கல்வியறிவு அடிப்படையிலும் பண்பாடு வெளிப்படுகிறது. மேலும் கற்றலுக்கு ஏற்பவும் பண்பாடு மாறும். தொழில் மாற்றத்தால் படுகர்கள் தங்கள் சொந்த பண்பாட்டை உருவாக்குகிறார்கள். பின்னர் அவர்களின் பண்பாட்டு, சூழலுக்கு ஏற்ப அவர்களை உருவாக்குகிறது.

படுகர்கள் தங்கள் பண்பாட்டை தனித்தனியாக உருவாக்கவோ மாற்றவோ முடியாது. இது ஒரு குழுக்கருத்து ஆகும். பெரும்பாலான உறுப்பினர்கள் இன்றியும் அதை கடைபிடிக்க வேண்டும். வெவ்வேறு இடங்களில் வாழும் படுகர்கள் தங்கள் பண்பாட்டை பின்பற்றுகிறார்கள்.

## பண்பாடு நடத்தை, தினசரி வாழ்க்கை

பிள்ளைகள் போட்டி போட்டுக் கொண்டு அடுத்தவரை விட சிறப்பாக நடந்து கொள்ளும் நடத்தையுடன் வளர்கின்றனர். போட்டி கலாச்சாரம் வளர்ந்து மேலோங்கி நிற்கிறது. படுகர் சமூகம் இதை ஏற்றுக் கொள்கிறது.

**“பண்பாட்டின் மாற்றம் மனித நடத்தையை புரிந்து கொள்வதற்கான திறவுகோலாகும். மனிதன் நடத்தையின் பல அம்சங்கள் சமூகக் கற்றலால் பாதிக்கப்படுகின்றன. பெரும்பாலானவர்கள் ஒரு குறிப்பிட்ட நடத்தையை ஏற்றுக் கொண்டால், அது ஒருவரின் பண்பாட்டிலும் சமூகத்தின் பண்பாட்டிலும் தாக்கத்தை ஏற்படுத்தலாம்”**[10].

## முடிவுரை

பண்பாடு என்பது பொது மற்றும் கல்வி உலகிற்கு தெரிந்த கருத்து. இது மக்களின் நடத்தைகளை வடிவமைப்பதிலும் இறுதியில் மனித பரிணாம வளர்ச்சியிலும் குறிப்பிடத்தக்க பங்கை கொண்டுள்ளது. பண்பாடு என்பது மக்களை வடிவமைக்கும் ஒரு தன்மை, அதன் கீழுள்ள அனைத்து நபர்களையும் உணர்வு பூர்வமாகவோ அல்லது ஆழ்மனதாகவோ பாதிக்கிறது.

வெவ்வேறு நிலைகளில் இருந்து பார்த்தால், பண்பாடு மற்றும் நடத்தையின் உறவு சிக்கலானது. பண்பாட்டின் பன்முகத்தன்மை மற்றும் அதைப்பற்றிய ஆய்வு மனிதர்களின் சிக்கலான தன்மையை குறிப்பாக நமது நடத்தைகளில் வெளிச்சத்திற்கு கொண்டு வருகிறது.

பொதுவாக பண்பாடு ஒரு நபரின் நடத்தையை பாதிக்கிறது. ஒரு நபரின் நடத்தை, அவர் ஒரு பகுதியாக இருக்கும் பண்பாட்டை பாதிக்கிறது.

பண்பாட்டின் ஒரு அம்சத்தில் மாற்றத்தைத் தூண்டும் போது காலப்போக்கில் மாற்றம் ஏற்படுகிறது. புவியியல் நீதிகளை அணுகல் மற்றும் ஒரு பண்பாட்டில் பெரும்பான்மையினரை அங்கீகரிப்பது போன்ற பல வரம்புக்கு உட்பட்ட காரணங்களால் பண்பாட்டில் மாற்றங்கள் பொதுவாக குறைவாகவே இருக்கும்.

## அடிக் குறிப்புகள்


1. “நீலகிரி மாவட்டத்தில் வரலாற்றுக்கு முந்தைய காலங்கள் உள்ளன”

- டாக்டர் எச் முனவர்ஜன், முனைவர் பட்ட ஆய்வு அறிஞர், பாரதியார் பல்கலைக்கழகம், கோவை.

2. “நீலகிரி மலைகளின் படைப்பு மரபு” - தென்னிந்திய மெகாலிதிக் குழிகளில் இருந்து டெரகோட்டா சலுகைகள் - கொரீனா வெசெல்ஸ் - எல்விசன் ‘www.academia.edu’.

3. சேரர்கள் - டாக்டர் என்.சுப்பிரமணியம்

4. M.Gopalakrishnan, 1995:203 – gazetteer – The Nilgiris district director of stationary and printing 817, Annasalai, madran – 600002(1985)

5. K.K.Ramachandran, 1986, vot.II: 184 gazetteer of india (kerala state) 1986, Government press, thiruvendrum, ernakulam and shornur.

6. Benjamin lewis Rice, ‘Gazetteer of india(mysore and coorg) 1878.

7. சமூகவியல் (எட்டாவது பதிப்பு) அப்பர் சேடில் ரிவர், நியூ ஜெர்சி, ப்ரெண்டிஸ், ஹால் இன்க்(அசல்) வெளியிடப்பட்டது - 2001.

8. வெள்ளை எல் ஏ(1948) மனித நடத்தையின் கலாச்சார மற்றும் உளவியல் விளக்கங்கள். அமெரிக்கன் சோஷியாலாஜிக்கல் ரிவியூ 12 (b) 686-698.

9. கிளென்.எஸ்.எஸ்(2004) தனிப்பட்ட நடத்தை கலாச்சாரம் மற்றும் சமூக மாற்றம், தி பிஹேவியர் அனலிஸ்ட், 27(2), 133-151

10. ஸ்மித் மற்றும் பலர் (2008) “கலாச்சார பரிமாற்றம் மற்றும் மனித நடத்தையின் பரிணாமம்“ ராயல் சொசைட்டியின் தத்துவ பரிவர்த்தனைகள், 363:3469 – 3476.